## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற உரை (3.8.2006)

கடந்த சில நாட்களாக முன்பு இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சிக்கின்றேன் என்ற பெயரால் இந்த ஆட்சியே “மைனாரிட்டி ஆட்சி” என்று எதிர்க்கட்சியினுடைய தலைவர் குறிப்பிட்ட போது, அவை முன்னவர் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் எழுந்து இது “மைனாரிட்டி அரசு” என்று நீங்கள் கருதினால் நம்பிக்கையில்லா தீர்மானம் தைரியம் இருந்தால் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அவர்கள் யோசித்துப் பார்த்தார்கள், ஆட்சியின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதா ? முதல் அமைச்சர் மீது கொண்டு வருவதா ? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து, எதற்காக வம்பு, தற்காலிகமாக சபாநாயகர் மீதே கொண்டு வந்து பார்க்கலாம் என்று சபாநாயகர் மீதே நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து இன்றைக்கு சோதித்துப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதுவரையிலே அவர்கள் மைனாரிட்டி அரசு என்று சொன்னது நிரூபிக்கப்படவில்லை. நிரூபிக்க முடியாது என்ற காரணத்தால் அவர்களாகவே இன்றைக்கு வெளியேறி தங்களுடைய தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவரைப் பற்றி – தங்களைப் பற்றி – நான் தங்களை என்று இப்போது குறிப்பிடுவது – நான் என் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்துள்ள சூழ்நிலையில் அரைக்கணமும் இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்க மாட்டேன் என்று தன் மான உணர்வோடு (கைதட்டல்) கீழே இறங்கி துணைத் தலைவருக்கு வழி விட்டு, அமர்ந்திருக்கிறீர்களே, தங்களைத் தான் பேரவைத் தலைவரே என்று குறிப்பிடுகிறேன்.

நீங்கள் இந்த ஐந்தாண்டு காலத்திற்கும் எங்களுக்குப் பேரவைத் தலைவர் தான். (கைதட்டல்) ஆனால் பேரவைத் தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், கடந்த காலத்தைச் சொல்ல வேண்டுமேயானால், நானும் பேராசிரியரும் இதே அவை யில் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்திருக்கிறோம், சிவசங்கரன்

பிள்ளை அவர்களைப் பார்த்திருக்கிறோம், செல்லப்பாண்டியனார் அவர்களைப் பார்த்திருக்கிறோம், புலவர் கோவிந்தனைப் பார்த்திருக்கிறோம், ராஜாராம் அவர்களைப் பார்த்திருக்கிறோம், பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களைப் பார்த்திருக்கிறோம். இப்படி பேரவைத் தலைவராக வீற்றிருக்கக் கூடிய கண்ணியமும் மதிப்பும் எல்லாவிதமான குணாதிசயங்களும் பொருந்தியவர்கள் இந்த அவையை அலங்கரித்திருக்கிறார்கள். எங்களைக் கூட சில நேரங்களில் ஏறத்தாழ 57ஆம் ஆண்டிலிருந்து நான் இந்த அவையிலே இருந்த வன் என்ற காரணத்தால், எங்களைக் கூட கடிந்து கொண்ட பேரவைத் தலைவர்கள் உண்டு. நாங்கள் அவர்களைத் திருப்பி கடித்ததில்லை. நாங்கள் அவைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் – நல்லது தான் சொல்கிறார்கள், நல்லவைகளைத் தான் காட்டுகிறார்கள் என்ற அளவில். அதனால்தான் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சிக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்ற போது கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்து நீங்கள் திறமையான மருத்துவர், அந்த மருந்தை எங்களுக்கும் கொடுத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட பேரவைத் தலைவர்கள் எல்லாம் அலங்கரித்த இந்த ஆசனத்தில் செல்லப்பாண்டி யனுக்குப் பிறகு, அந்த வழி வந்த தாங்கள் இன்றைக்கு இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். செல்லப் பாண்டியன் கோபித்துக் கொள்வதிலும் உச்சக் கட்டத்திற்கு செல்வார், சிரித்து மகிழ்வதிலும் உச்சக் கட்டத்திற்குச் செல்வார். ஒரு முறை பெரியவர் பக்தவத்சலம் கூட நீங்கள் நன்றாகத் தான் சிரிக்கிறீர்கள், ஆனால் எங்கள் மீது எச்சில் படாமல் சிரியுங்கள் என்று ஒரு முறை வேடிக்கையாகச் சொன்னார். அந்த அளவிற்கு மனம் விட்டுச் சிரிக்கக் கூடிய, களங்கம் இல்லாத ஒருவர் செல்லப் பாண்டியன் அவர்கள். அவர் வழி வந்தவர் நீங்கள் என்று சொல் கின்ற காரணத்தால் நீங்கள் களங்கமற்றவர் என்பதை நான் நன்றாக உணர்வேன்.

எப்படி ஒரு சபாநாயகர் இருக்கக் கூடாது என்பதற்கு சில உதாரணங்கள் இருக்கின்றன. ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். நான் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் பேசும்போது

சொன்னேன். உங்கள் சபாநாயகரைப் பற்றிய ஆதாரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கிறது. அதைத் தருகிறேன், நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள் என்று கூடச் சொன்னேன். அதற்கு வாய்ப்பு கிடைக்காதோ என்று கருதிக் கொண்டிருந்த போது, நல்லவேளையாக எதிர்க்கட்சிக்காரர்களே, சபாநாயகர் மீதே ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொடுத்து, அந்த வாய்ப்பை எனக்கு வலுவிலே வழங்கியிருக்கிறார்கள்.

இந்த அவைக்கு, இந்த அவையை நடத்துகின்ற செயலகத்துக்கு உட்பட்ட சில பகுதிகள் கோட்டையைச் சுற்றியும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கின்ற விடுதிகளைச் சுற்றியும் இருக்கின்றன. அவைகளில் ஒன்று உணவு விடுதி. அந்த உணவு விடுதி காலாகாலமாக பலராலும் ஏலம் எடுக்கப்பட்டோ, அல்லது ஒப்பந்தம் போடப்பட்டோ தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அவற்றில் அண்ணா பெயரால் அமைந்த ஒரு அசைவ உணவு விடுதி இருந்தது. அந்த விடுதியைப் பற்றிய ஒரு விவரத்தை மாத்திரம் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள அண்ணா உணவகத்தை நடத்தி வரும் கே.வி.ஆர். மணி என்பவர் அந்த உணவகம் நடத்த வழங்கப்பட்ட காலம் 3–2–2002 உடன் முடிவுற்றபடியால், அந்த உணவகத்தை உடனடியாக காலி செய்து ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு அந்த கே.வி.ஆர். மணி என்ற உணவகத்தின் உரிமையாளர், அந்த உணவகத்தை ஒப்பந்த அடிப்படையில் வருடத் தொகையை 2 லட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய் கொடுத்து நடத்தி வருவதாகவும், அந்த உணவகத்தைத் தொடர்ந்து அவரே நடத்துவதற்கு அனுமதி தருமாறும், அதற்கு அதே ஒப்பந்தத் தொகையான 2 லட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய் வருடாந்தர வாடகைத் தொகையை தொடர்ந்து செலுத்திவிடுவதாகவும் கேட்டுக் கொண்டு கடிதம் எழுதுகிறார். அதற்கான கோப்பில் முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள், 16–2–2002 அன்று தன் கைப்பட பிறப்பித்த ஆணையில் கே.வி.ஆர். மணி அவர்களுக்கே ஓராண்டு காலத்திற்கு அந்த உணவகத்தை அனுமதிக்கலாம் என்றும், மாத வாடகையாக 2750 ரூபாய்

நிர்ணயிக்கலாம் என்றும் எழுதியுள்ளார். கே.வி.ஆர். மணி அவராகவே தர முன் வந்த தொகை ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய். காளிமுத்து பிறப்பித்த ஆணை மாதம் ஒன்றுக்கு 2750 ரூபாய். இது ஆண்டு ஒன்றுக்கு 33 ஆயிரம் ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டால் போதும் என்பதாகும்.

அவர் கொடுக்க முன்வந்தது 2 லட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய். போதும் என்று இவர் ஆணை பிறப்பித்தது ஆண்டு ஒன்றுக்கு 33 ஆயிரம் ரூபாய். மீதப் பணம் எங்கே போயிற்று என்பதை அறிந்து கொள்ள அவைத் தலைவராகிய தங்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பவர்கள் தங்களுடைய முன்னாள் அவைத் தலைவர் மீது என்ன தீர்மானம் கொண்டு வருவார்களோ என்பது தான் எனக்குப் புரியவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைத் தான் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

இன்னும் நிறைய இருக்கின்றது, ஏராளம் இருக்கின்றது. எப்படிப்பட்ட சபாநாயகர்கள் இருந்த இடத்தில் இப்படிப்பட்ட ஒரு சபாநாயகரும் இருந்திருக்கிறார் என்ற அடையாளத்தைத் தான் இப்போது நான் சொன்னேன். அவர்களை எல்லாம் தாண்டி தாங்கள் இன்றையதினம் "அப்படிப்பட்ட சபாநாயகர் தான் நான்", "இப்படிப் பட்ட சபாநாயகர் அல்ல" என்று நிரூபித்துக் கொண்டிருக்கும்போது, எங்களுடைய நம்பிக்கைக்கு உரியவராக, என்னுடைய நம்பிக்கைக்கு உரியவராக, கடந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நம்பிக்கைக்குரியவராக விளங்கி – இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கின்ற தங்கள் மீது நம்பிக்கை யில்லா தீர்மானம் என்பது அவர்கள் தங்களைத் தாங்களே நம்பாமல் கொடுத்தது என்பதைத் தவிர வேறல்ல என்பதை எடுத்துக் கூறி, நிறைந்த நம்பிக்கை தங்கள்பால் எங்களுக்கு இருக்கிறது, மீண்டும் இந்த அவையில், இந்த இருக்கையில் வந்து அமருங்கள், எங்களை வழி நடத்துங்கள் என்று கேட்டு அமர்கின்றேன்.